# 10 - ஹாலோ ஆல்கேன்கள் மற்றும் ஹாலோ அரீன்கள்

**ஆல்கைல் ஹேலைடுகள் :**

ஹாலஜன் அணு ஆல்கைல் தொகுதியுடன் இணைந்திருந்தால். அவை ஆல்கைல் ஹாலைடுகள் என அழைக்கப்படுகின்றன.

பொது வாய்ப்பாடு : Rx (அ) $C_nH_{2n+1}X$
X – F, Cl, Br, I

**வகைப்படுத்துதல் :**

ஆல்கைல் ஹாலைடுகளில் ஹேலஜன் இணைந்திருக்கும் கார்பனின் தன்மையைப் பொருத்து ஓரிணைய ($1^O$) ஈரிணைய ($2^O$) மூவிணைய ($3^O$) ஆல்கைல் ஹேலைடுகள் என அழைக்கப்படுகின்றன.

$$\underset{1^O}{RCH_2X}, \quad \underset{2^O}{R_2CHX}, \quad \underset{3^O}{R_3CX}$$

**தயாரிப்பு முறைகள் :**

**1. ஆல்கேன்களின் ஹாலஜனேற்றம் :-**

RH →
- $Br_2$ / $AlBr_3$ → R – Br + HBr
- $Cl_2$/சூரிய ஒளி → R – Cl + HCl
- $I_2$ / $HIO_3$ (அ) $HNO_3$ ஆக்சிஜனேற்றி → R – I + HI

**2. ஆல்க்கீன்களிலிருந்து :-**

$$R-CH=CH_2 \xrightarrow{HX} R-\underset{X}{\underset{|}{C}}H-CH_3$$

இவ்வினை மார்கோனிகாப் விதியைப் பின்பற்றுகிறது.

$$R-CH=CH_2 \xrightarrow[H_2O_2]{HX} R-CH_2-CH_2-X$$

இவ்வினை எதிர்மார்கோனிகாப் விதியைப் பின்பற்றுகிறது.

**3. ஆல்கஹால்களிலிருந்து :-**

R – OH →
- $PCl_5$ → R – Cl
- சிவப்பு P/$I_2$ → R – I
- $PI_3$ / சிவப்பு P/Br2 → R - Br
- $PBr_3$ / $SoCl_2$ → R - Cl

***பண்புகள் :-***

* கீழ்நிலை ஆல்கைல் ஹேலைடுகள் [ $CH_31$, $CH_3Br$ மற்றும் $C_2H_5Cl$ ] வாயுக்களாகும். மற்றவை இனிய நறுமணம் கொண்ட நீர்மங்களாகும்.

* இவை முனைவுத் தன்மையை பெற்று இருந்தாலும் நீரில் கரைவதில்லை. ஏனெனில் இது நீருடன் H- பிணைப்பை தருவதில்லை.

* இவைகள் ஆல்கஹால், ஈதர், பென்சீனில் கரைகிறது.

* கொதிநிலை மற்றும் அடர்த்தி வரிசை $RI \succ RBr \succ RCl \succ RF \succ RH$
ஆல்கேன்

* குறிப்பிட்ட ஆல்கைல் ஹாலைடுகளின் கொதிநிலை ஆல்கைல் தொகுதியின் உருவளவு உயருவதைப் பொறுத்து அதிகரிக்கிறது.

* உருவளவு உயரும் போது மூலக்கூறு எடையும் அதிகரிக்கிறது. இதனால் வாண்டர் வால்ஸ் விசையும் அதிகரிக்கிறது.

GOVERNMENT OF TAMILNADU TRUTH ALONE TRIUMPHS

ஆகவே கொதிநிலையும் அதிகரிக்கிறது.

* கொதிநிலை வரிசை $MeI \succ MeBr \succ MeCl \succ MeF \succ CH_4$
மீத்தேன்

**வேதிப்பண்புகள் :-**

இவை அதிக வினைபுரியும் திறன் உடையது. ஏனெனில் $-CX-$ பிணைப்பு முனைவுறும் தன்மைக் கொண்டது.

கருகவர் பதிலீட்டு வினைகள்

(i) $SN^1$ - **வினையின் வழிமுறை :**



(ii) $SN^2$ - **வினையின் வழிமுறை :**



| வ.எண். | $SN^1$ - வினை | $SN^2$ வினை |
|---|---|---|
| 1. | ஒற்றை மூலக்கூறு பதிலீட்டு வினை | இரு மூலக்கூறு பதிலீட்டு வினை |
| 2. | வினையின் வேகம் $\alpha$ (ஆல்கைல் ஹேலைடு)<br>(அ) வினைவேகம் $\alpha$ [RX] | வினையின் வேகம் $\alpha$ (ஆல்கைல் ஹாலைடு)<br>வினைவேகம் $\alpha$ [RX] $[Nu^-]$ (கருக்கவர் கரணி) |
| 3. | வினையின் வகை. ஒன்று | இரண்டு |
| 4. | சுழிமாய்கலவை (d1) கிடைக்கிறது. | எதிர்மாறாக்கம் கொண்ட விளைபொருள் கிடைக்கிறது. |
| 5. | முனைவு விளைவு பங்கு ஏற்கிறது. | கொள்ளிட விளைவு பங்கு ஏற்கிறது. |
| 6. | (Polar Protic) முனைவு புரோட்டானை வழங்கும் கரைப்பானில் $SN^1$ வினை நடைபெறுகிறது | (Polar a Proptic) முனைவு, புரோட்டானை வழங்காத கரைப்பானில் $SN^2$ வினை நடைபெறுகிறது. |
| 7. | கருகவர் கரணியின் விளைவு :<br>குறைந்த செறிவு கொண்ட வலிமை குறைந்த கருகவர் கரணியினால் வினை நடைபெறுகிறது. | வலிமை மிக்க கருகவர் கரணியினால் வினை நடைபெறுகிறது. |
| 8. | வெளியேறும் தொகுதியின் வரிசை :-<br>$I^- > Br^- > Cl^- > F^-$ | $I^- > Br^- > Cl^- > F^-$ |
| 9. | வினைப்பொருளின் வினைதிறன் வரிசை :-<br>$30^o$ > ஆன்லைல் ⊔ பென்சைல் > $2^o > 1^o > CH_3X$ | $CH_3X > 1^o > 2^o > 3^o$ |

**வினைல் (ம) அரைல் ஹேலைடு :-**

வினைல் குளோரைடும், குளோரோ பென்சீனும் பெரும்பாலும் பதிலீட்டு வினைகளில் ஈடுபடுவதில்லை $CH_2 = CH - Cl$

**வினைல் குளோரைடில் உடனிசைவு :-**



$C - X$ பிணைப்பிற்கு இடையே பகுதியளவு இரட்டைப் பிணைப்பு தன்மை உள்ளதால் $C - X$ பிணைப்பை உடைப்பது மிகவும் கடினம் ஆகவே, வினைல் ஹாலைடு மிககுறைந்த வினைதிறனைக் கொண்டுள்ளது.

**Bringed bicyclic Iompound :**

**பால அமைப்பு இரட்டைவளையச் சேர்மங்கள் :**

* இவை விறைப்புத் தன்மை (rigidity) கொண்டதால். இவற்றின் வினைதிறன் குறைவு.
* பால அமைப்பு கார்பனின் (Bridgechead carbon) எண்ணிக்கை அதிகரிக்கும் போது விறைப்புத்தன்மை குறைவதால், வினைதிறன் உயருகிறது.

எ.கா. வினைதிறன் வரிசை :-



**சில கருகவர் பதிலீட்டு வினைகள் :**

**1. நீராற்பகுப்பு :-**



$\overset{\ominus}{OH}$ – சில கருகவர் காரணி

$C_2H_5OH + NaBr$

**2. வில்லியம்சன் தொகுப்பு முறை :-**

$$C_2\ H_5\ Br \xrightarrow{NaOCH_3} C_2\ H_5\ OCH_3\ +\ NaBr$$

$$2CH_3Br \xrightarrow{Ag_2O} CH_3\ OCH_3\ + 2AgBr$$

$\overset{\ominus}{O}CH_3$ - கருகவர் காரணி

**3. பொட்டாசியம் (ம) சில்வர் சயனைடு உடன் வினை :-+**

$$C_2H_5\ Br \xrightarrow[\text{ஆல்கஹால்}]{KCN} C_2\ H_5\ CN\ +\ KBr$$

எத்தில் சயனைடு

$$C_2H_5\ Br \xrightarrow[\text{ஆல்கஹால்}]{AgCN} C_2\ H_5\ NC\ +\ AgBr$$

எத்தில் ஐசோ சயனைடு

$C^-N$ - கருகவர் கரணி

**4. பொட்டாசியம் (ம) சில்வர் நைட்ரைட் உடன் வினை :-**

$$C_2H_5\ Br \xrightarrow[\text{ஆல்கஹால்}]{KNO_2} C_2\ H_5\ ONO\ +\ KBr$$

எத்தில் நைட்ரைட்

$$C_2H_5\ Br \xrightarrow[\text{ஆல்கஹால்}]{AgNO_2} C_2\ H_5\ NO_2\ +\ AgBr$$

நைட்ரோ ஈத்தேன்

$\overset{\ominus}{NO_2}$ - கருகவர் கரணி.

**5. சோடியம் (அ) பொட்டாசியம் ஹைட்ரஜன் சல்பைடு உடன் வினை :**

$$C_2H_5Br\ +\ NaSH \xrightarrow{\text{ஆல்கஹால்}} C_2H_5SH\ +\ NaBr$$

எத்தில் தயால் (அ) எத்தில் மெர்காப்டன்

$\overset{\ominus}{SH}$ - கருகவர் கரணி.

**6. சோடியம் (அ) பொட்டாசியம் சல்பைடு உடன் வினை :**

$$2C_2H_5Br\ +\ K_2S \xrightarrow[-2KBr]{\text{ஆல்கஹால்}} C_2H_5-S-C_2H_5$$

டை எத்தில் தயோ ஈதர்

$$C_2H_5Br + Na_3CH_3 \xrightarrow{\text{ஆல்கஹால்}} C_2H_5SCH_3 + NaBr$$

சோடியம் மெர்கப்டைடு — எத்தில் மெத்தில் தயோ ஈதர்

$S_2^-$ கருகவர் கரணி.

**7. கொழுப்பு அமிலத்தின் சில்வர் உப்புடன் வினை :**

$$CH_3\ COO\ Ag\ +\ BrC_2H_5 \xrightarrow[\text{ஆல்கஹால்}]{\Delta} CH_3\ COOC_2H_5$$

எஸ்டர்

$RCO\overset{\ominus}{O}$ - கருகவர் காரணி.

**8. சோடியம் அசிட்டிலைடு உடன் வினை :**

$$C_2H_5Br\ +\ NaC \equiv \subset H \xrightarrow[-NaBr]{} C_2H_5\ C\ \equiv\ CH$$

சோடியம் அசிட்டிலைடு

$CH \equiv \overset{\ominus}{C}$ கருகவர் காரணி.

**9. அம்மோனியா உடன் வினை :**

$$C_2H_5Br + NH_3 \xrightarrow{100^O C} C_2H_5NH_2 + HBr$$

$$C_2H_5NH_2 + C_2H_5Br \xrightarrow{\Delta} (C_2H_5)_2 NH + HBr$$

$$(C_2H_5)_2 NH + C_2H_5Br \xrightarrow{\Delta} (C_2H_5)_3 N + HBr$$

$$(C_2H_5)_3 N + C_2H_5Br \xrightarrow{\Delta} (C_2H_5)_4 \overset{\oplus}{N} \overset{\ominus}{Br}$$

## நீக்க வினைகள்

**$E_1$ - நீக்க வினைகள்**

படி : 1



படி : 2



**$E_2$ - நீக்க வினைகள்**



இவை 1, 2 நீக்க வினை (அ) $\beta$ - நீக்க வினை (அ) மறுபக்க (trans elimination) நீக்க வினை (அ) எதிர்நீக்க வினை antielimination எனவும் அழைக்கப்படுகிறது.

**ஹைட்ரோ ஹாலஜன் நீக்க வினை :-**




GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

QB365 https://www.qb365.in/materials/

**<u>ஸெயிட்ஸெப் விதி : (Saytzeff law)</u>**

ஹைட்ரோஹாலஜன் நீக்கம் மற்றும் நீர்நீக்க வினைகளில் அதிக ஆல்கைல் தொகுதிகள் கொண்ட ஆல்கீன்கள் முதன்மை விளைபொருளாக க



**<u>கார்போனியம் அ</u>**

Rearrangement of carbocation

$SN^1$ $E_1$ வினைகளில் மறுஒழுங்கமைந்த (Rearrange product) விளைப்பொருள் கிடைக்கின்றன. கார்போனியம் அயனியின் நிலைப்புத்தன்மை வரிசை : $3^O \succ 2^O \succ 1^O \succ$ திறன் அடிப்படையில் மெத்தில் இடம் பெயரும் தொகுதியின் வரிசை

$Ph \succ H \succ CH_3$

**SN¹ – 2 இடமாற்ற வினை :-**



**$E_1$ - ல் இடமாற்ற வினை :-**



QB365 https://www.qb365.in/materials/

**தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பரிமாண வினைகள் :-**

* தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பரிமாண வினைகள் ஒரு குறிப்பிட்ட முப்பரிமாண மாற்றியம் அமைப்பானது வினைமுடிந்த பிறகு (stereoisomer) இரண்டுக்கு மேற்பட்ட முப்பரிமாண மாற்றிய விளைப்பொருட்களை தருகின்றன.

* இவற்றில் ஒன்று மட்டும் மற்றவை விட அதிக அளவு கிடைக்கின்றன. இத்தகைய வினைப்பொருள் முப்பரிமான தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பரிமாண வினைப்பொருள் (stereoselective product) ஆகும். இவ்வினைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பரிமாண வினைகளாகும்.

எ.கா.




**Stereosp**

**(குறிப்பிட்**

ஒரு முப்பரிமாண மாற்றிய வினைபடுபொருள் வினை முற்றுபெற்றதும் ஒரே ஒரு குறிப்பிட்ட முப்பரிமாண மாற்றிய வினைபொருளை மட்டுமே தரும் இத்தகைய வினைகள் குறிப்பிட்ட முப்பரிமாண வினை ஆகும்.





* மீசோ சேர்மம் டிரான்ஸ் மாற்றிய விளைப்பொருளை தருகிறது.

* d/ அமைப்பு சீஸ் மாற்றிய விளைப்பொருளைத் தருகிறது.

**அரைல் ஹாலைடுகள்**

* அரோமேட்டிக் உட்கருவுடன் ஹாலஜன் அணு நேரடியாக இணைந்திருந்தால் அத்தகைய சேர்மங்கள் அரைல் ஹாலைடுகள் எனப்படுகின்றன. எ.கா. குளோரோபென்சீன்



எ.கா. பொதுவான வாய்ப்பாடு

Ar X ; X = F, Cl, Br, I

ஆல்கைல் ஹாலைடுகளை போல அரோமேட்டிக் ஹாலைடுகள் கருகவர் பதிலீட்டு வினைக்கு உட்படுவதில்லை.

GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

**குறைந்த வினைத்திறனுக்கான காரணங்கள் :**

1. அரைல் ஹேலைடுகளிலுள்ள C – X பிணைப்பு நீளம் சிறியது மற்றும் வலிமையானது.

2. $\pi$ - எலக்ட்ரான்களின் உடனிசைவு காரணமாக அரோமேட்டிக் பென்சீன் வளையம் எலக்ட்ரான் அடர்வு மையமாக உள்ளது. இது கருக்கவர் கரணியை (Nu⁻) அதிகமாக விலக்குகிறது.

**<u>தயாரிப்பு முறைகள் :</u>**

**<u>1. நேரடி ஹாலஜன் ஏற்றம் :</u>**



* இது எலக்ட்ரான் கவர் பதிலீட்டு வினை ஆகும்.

**<u>2. டையசோனியம் உப்பைச் சிதைத்தல் :-</u>**

i) சாண்ட்மேயர் வினை :-



ii) காட்டர்மேன் வினை :-

$$C_6H_5N_2Cl \xrightarrow[HCl]{Cu} C_6H_5Cl$$

iii) $C_6H_5N_2Cl \xrightarrow[\Delta]{KI} C_6H_5I + N_2 + KCl$

iv) $C_6H_5N_2Cl \xrightarrow{NaBF4} C_6H_5\overset{\oplus}{N_2}\ BF_4^-$ (பென்சீன் டையசோனியம் புளூவோபோரேட்)

$C_6H_5F + N_2 + BF_3$

இவ்வினை பால்ஸ் ஸ்கிமன் வினை ஆகும்.

**<u>3. ரேஷிக் செயல்முறை :-</u>**

$$2C_6H_6 + 2HCl + O_2 \xrightarrow[500K]{Cu_2Cl_2} 2C_6H_5Cl + 2H_2O$$

**<u>4. ஹன்ஸ்டைக்கர் வினை :-</u>**

1.



2. அரோமேட்டிக் கருகவர் பதிலீட்டு வினைகள் :-



இவ்வினை பென்சைன் வினைவழி (அ) நீக்கல் - கூட்டு வினை வழி (அ) சைன் வினை வழி ஆகும்.

**3. <u>SN Ar</u> வினைவழிமுறை (அ) சேர்க்கை - நீக்க வினை வழிமுறை (அ) <u>IPSO</u> வினை :**

படி : 1



உடனிசைவு மூலம் கார்பனயான அயனி நிலைத்தன்மை அடைகிறது.

படி : 2



* வினையின் வினை படி : இரண்டு.

* வினைவேகம் ஆகவே, வினைவகை : இரண்டு. (அரைல் ஹாலைடு) (கருகவர் காரணி)

* எலக்ட்ரான் கவரும் தொகுதிகள் (–I விளைவு) வினையின் வேகத்தை அதிகரிக்கிறது.

* எலக்ட்ரான் வழங்கும் தொகுதிகள் (+I விளைவு வினையின் வேகத்தை குறைக்கிறது.

**வினைத்திறன் வரிசை :**



* வெளியேறும் தொகுதியை (Leaving group) பொறுத்து வினைதிறன் வரிசை : $F \succ\succ Cl \succ Br$

**4. <u>அரோமேட்டிக் எலக்ட்ரான் கவர் பதிலீட்டு வினைகள் :</u>**

* ஹாலஜன்கள் ஆர்த்தோ, பாரா வழிபடுத்தும் தொகுதியாகும்.

* இதன் ஆற்றுப்படுத்தும் பண்பு பென்சீனை விட குறைவாக உள்ளது.

* பொதுவாக பாரா விளைபொருள் முதன்மை பொருளாக கிடைக்கிறது.

***i) நைட்ரோ ஏற்ற வினை :***



***ii) சல்போனேற்ற வினை :-***



***iii) ஹாலோஜனேற்ற வினை :-***



**5. உர்ட்ஸ் - ஃபிட்டிக் வினை :**

$$C_6H_5Cl + 2Na + Cl - C_2H_5 \xrightarrow[\text{உலர் ஈதர்}]{\Delta} C_6H_5 - C_2H_5 + NaCl$$

**6. கிரிக்னார்டு வினை :-**



**7. உல்மன் வினை :- (Ullmann Reaction)**

$$2C_6H_5I \xrightarrow[200^O C]{Cu} C_6H_5 - C_6H_5$$

பை பினைல்

அரைல் ஹேலைடின் வினைதிறன் வரிசை $ArI \succ ArBr \succ ArCl$

**பாலி ஹேலஜன்கள்**

* பாலி ஹேலகன் சேர்மங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஹாலஜன் அணுக்களை கொண்டு உள்ளது. ஹாலஜன் அணுக்களின் எண்ணிக்கையை பொறுத்து டை ஹாலோ, டிரை ஹாலோ, டெட்ரா ஹாலோ என வகைப்படுத்தப்படுகிறது. டை ஹாலோ சேர்மங்களின் வகைப்பாடு :

**(i) ஜெம் டை ஹாலைடுகள்:**

இரண்டு ஹாலகன் அணுக்களும், ஒரே கார்பனில் இணைந்து இருக்கும்.

எ.கா.

$$R - \underset{\underset{Cl}{|}}{\overset{\overset{Cl}{|}}{C}} - R \qquad R - CH_2 - \underset{\underset{Cl}{|}}{CH} - Cl$$

**(ii) விசினல் டை ஹாலைடுகள் :**

இரண்டு ஹாலகன் அணுக்களும், அடுத்தடுத்த கார்பனில் இணைந்து இருக்கும்.

எ.கா.

$$R - \underset{\underset{Cl}{|}}{CH} - \underset{\underset{Cl}{|}}{CH} - R \quad , \quad R - \underset{\underset{Cl}{|}}{CH} - \underset{\underset{Cl}{|}}{CH_2}$$

**(iii) பாலி மெத்திலீன் டை ஹாலைடுகள் :**

இரண்டு ஹாலஜன் அணுக்களும் கடைசி கார்பன் அணுக்களுடன் இணைந்து இருக்கலாம் (அ) விசினல் இடத்தை தவிர மற்ற கார்பன் அணுவுடன் இணைந்து இருக்கலாம்.

எ.கா. $ClCH_2CH_2CH_2CH_2Cl$

**டை குளோரோ ஆல்கேன் தயாரிப்பு முறைகள் :**

i) ஜெம் :

$$CH_3-\underset{\substack{|\\H}}{C}=O \xrightarrow{PCl_5} CH_3-\underset{\substack{|\\H}}{C}-Cl_2+POCl_3$$

ஜெம் டைகுளோரோ ஈத்தேன் (அ) 1, 1 - டை குளோரோ ஈத்தேன்

ii) $HC\equiv CH \xrightarrow{HCl} CH_2=CH.Cl \xrightarrow{HCl} CH_3-CH.Cl_2$

வினைல் குளோரைடு

iii)

$$CH_3-\overset{\substack{O\\||}}{C}-CH_3 \xrightarrow{PCl_5} CH_3-\underset{\substack{|\\H}}{\overset{\substack{Cl\\|}}{C}}-CH_3$$

ஜெம் டைகுளோரோ புரப்பேன் (அ) 2, 2 - டை குளோரோ புரப்பேன்

**விசினல் டை குளோரோ ஈத்தேன் : (தயாரிப்பு முறை)**

$CH_2=CH_2 \xrightarrow{Cl_2} Cl-CH_2-CH_2-Cl$ *1, 2 - டை குளோரோ ஈத்தேன்*

$$\underset{\substack{|\\OH}}{CH_2}-\underset{\substack{|\\OH}}{CH_2} \xrightarrow[(or)PCl_5]{HCl(or)SOCl_2} \underset{\substack{|\\Cl}}{CH_2}-\underset{\substack{|\\Cl}}{CH_2}$$

*பண்புகள் :*

* இவ்விரண்டு டை குளோரோ ஈத்தேன்களும் நிறமற்ற, இனிய நறுமணம் உடைய நீர்மங்கள்.
* இவைகள் கரிம கரைப்பானில் கரைகின்றன. ஆனால் நீரில் கரைவதில்லை.

வேறுபடுத்தும் ஆய்வு.




GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

QB365 https://www.qb365.in/materials/

## டிரை ஹாலோ ஆல்கேன்கள்

**குளோரோஃபார்ம் :-**

*தயாரிப்பு முறை :*

அசிட்டோன் (அ) எத்தில் ஆல்கஹாலை, சலவைத்தூள் உடன் காய்ச்சி வடிக்கும் குளோரோஃபார்ம் கிடைக்கிறது.

$$2CH_3CH_2OH + 8Cl_2 + Ca(OH)_2 \rightarrow 2CHCl_3 + 10HCl + (HCOO)_2Ca$$

*குறிப்பு:-* $CaOCl_2 + H_2O \rightarrow Ca(OH)_2 + Cl_2$

*பண்புகள் :-* இது இனிய நறுமணம் கொண்ட நீர்மம்:

**(i) ஆக்சிஜனேற்றம் :**

$$CHCl_3 \xrightarrow[\text{சூரிய ஒளி}]{\text{காற்று}} COCl_2 + HCl$$

பாஸ்கீன் ஒரு நச்சுத்தன்மை கொண்ட வாயு. பாஸ்ஜீன் (அ) கார்போனைல் குளோரைடு

* குளோரோஃபார்ம் காற்று (ம) சூரிய ஒளியில் வினைபுரிந்து நச்சுத்தன்மை கொண்ட பாஸ்ஜீன் வாயுவை தருகிறது.
* இவ்வினையை தடுக்க, குளோரோஃபார்ம் அடர் பழுப்பு கண்ணாடி பாட்டில்களில் சூரிய ஒளி (ம) காற்று புகாத வண்ணம் சேகரிக்கப்படுகின்றது.
* மேலும் 1% $C_2H_5OH$ - யை சேர்க்கும் போது உருவான பாஸ்ஜீன் வாயு தீங்கற்ற எத்தில் கார்பனேட்டாக மாறுகிறது.

**(ii) ஒடுக்கவினை :**

$$CHCl_3 + 2(H) \xrightarrow[HCl]{Zn} CH_2Cl_2 + HCl$$

*மெத்தில் குளோரைடு*

$$CHCl_3 + 3(H) \xrightarrow[\text{ஆல்கஹாலில் கரைந்த } HCl]{Zn} CH_3Cl + HCl$$

குளோரோஃபார்ம் Zn (ம) ஆல்கஹால் கலந்த HCl உடன் ஒடுக்கமடைந்து மெத்தில் குளோரைடை தருகிறது.

$$CHCl_3 + 6(H) \xrightarrow[H_2O]{Zn} CH_4 + 3HCl$$

**(iii) நீராற்பகுப்பு :-**

குளோரோபார்ம் நீரேறிய (அ) ஆல்கஹால் கலந்த KOH உடன் நீராற்பகுப்பு அடைந்து பொட்டாசியம் ஃபார்மேட்டை தருகிறது.




**(iv) கார்பைலமீன் வினை :**

$$RNH_2 + CHCl_3 + 3KOH \rightarrow RNC + 3KCl + 3H_2O$$

ஆல்கைல் ஐசோசயனைடு

(அருவருக்கத்தக்க மணம்)

* இந்த வினை ஓரிணைய அமினுக்கான வினை ஆகும்.
* இவ்வினையில் டைகுளோரோ கார்பன் $(:CCl_2)$ இடைநிலை பொருளாகக் கிடைக்கிறது.

**5. ரீமர் - டீமன் வினை :**



ÖËs ç ª l _ $CCl_2$ எலக்ட்ரான் கவர் காரணி ஆகும்.

**6. கீட்டோன் உடன் குறுக்க வினை :**



**7. மேலும் சில வினைகள் :-**



**அயோடோபார்ம்.**

$CH_3CO$ - தொகுதியை கொண்ட (ஆல்டிஹைடு (ம) கீட்டோன்) கார்போனைல் சேர்மங்கள் மற்றும் தொகுதியை கொண்ட ஆல்கஹால்கள் அயோடோஃபார்ம் வினையைத் தருகின்றன.

$$CH_3-\overset{O}{\overset{||}{C}}-R \xrightarrow{I_2} CI_3-\overset{O}{\overset{||}{C}}-R$$ (அயோடோ ஏற்ற வினை)

$$CI_3-\overset{O}{\overset{||}{C}}-R \xrightarrow{KOH} CHI_3 + HCOOK$$ (நீராற்பகுப்பு வினை)

அயோடோஃபார்ம் (மஞ்சள் நிற படிகம்)

இங்கு R = H (or) $CH_3$

$$CH_3-\underset{OH}{\underset{|}{CH}}-R \xrightarrow[KOH]{I_2} CH_3-\overset{O}{\overset{||}{C}}-R$$ (ஆக்சிஜனேற்றம்)

$$CH_3-\overset{O}{\overset{||}{C}}-R \xrightarrow{I_2} CI_3-\overset{O}{\overset{||}{C}}-R \xrightarrow{KOH} CHI_3 + HCOOK$$

R = H (or) $CH_3$ (or) COOH
R = COOH ஆக இருந்தால்

$$CH_3-\underset{OH}{\underset{|}{CH}}-COOH \xrightarrow{NaOI} CHI_3 + \begin{matrix} COONa \\ | \\ COONa \end{matrix}$$

லாக்டிக் அமிலம்

$$CH_3-\underset{O}{\underset{||}{C}}-COOH \xrightarrow{NaOI} CHI_3 + \begin{matrix} COONa \\ | \\ COONa \end{matrix}$$

பைருவிக் அமிலம்

*பண்புகள் :-*

* மஞ்சள் நிற படிகத்திடப்பொருள்.
* இதன் உருகுநிலை 119°C
* இதன் வேதிப்பண்புகள் குளோரோஃபார்ம் போல் உள்ளது.
* இது விரும்பத்தகாத மணம் உடையது (unpleasant odour)
* இது புரை தடுப்பானாக பயன்படுகிறது.
* $CHF_3$ ஆனது $CHCl_3$ யை விட குறைந்த அமிலத்தன்மை கொண்டது.

*காரணம் :-*

$\overset{\ominus}{C}Cl_3$ ஆனது உடனிசைவால் நிலைப்புத்தன்மை அடைகிறது. இவ்உடனிசைவு குளோரினிலுள்ள 3d - ஆர்பிட்டால் காரணமாக உருவாகிறது.

ப்ளூரினில் 3d ஆர்பிட்டால் இல்லாததால் உடனிசைவு ஏற்பட வாய்ப்பில்லை ஆகவே $CHCl_3$ ஆனது அதிக அமிலத் தன்மையை கொண்டு உள்ளது.

## டெட்ரா ஹாலோ ஆல்கேன்கள்

**கார்பன் டெட்ரா குளோரைடு :**

*தயாரிப்பு முறை :*

1. ஆல்கேனில் குளோரோ ஏற்ற வினை :

$$CH_4 + 4Cl_2 \xrightarrow[\text{சூரிய ஒளி}]{UV\ (அ)} CCl_4 + 4HCl$$
$$\downarrow$$
(அதிக அளவு)

இவ்வினை தனி உறுப்பு பதிலீட்டு வினையை சார்ந்தது.

2. $$CH_4 + 4Cl_2 \xrightarrow{CuCl_2} CCl_4 + 4HCl$$

3. $$CS_2 + 3Cl_2 \xrightarrow[\Delta]{AlCl_3 (or) FeCl_3} CCl_4 + S_2Cl_2$$

பின்னக் காய்ச்சி வடித்தல் மூலமாக $CCl_4$ (ம) $S_2Cl_2$ - வை தனித்தனியாக பிரித்து எடுக்கப்படுகின்றன.
கார்பன் டை சல்பைடு உடன் $S_2Cl_2$ வினைபுரிந்து மேலும் $CCl_4$-யை தருகிறது.

$$CS_2 + 2S_2Cl_2 \rightarrow CCl_4 + 6S$$

4. $$CH_3-CH_2-CH_3 + 9Cl_2 \xrightarrow[70-100\,atm]{400^O C} CCl_4 + Cl_3C-CCl_3$$

புரப்பேன் ஹெக்சா குளோரோ ஈத்தேன்

<u>பண்புகள் :</u>

* இவை நிறமற்ற, எளிதில் ஆவியாகும் மற்றும் எரியாத நீர்மம்.
* இதன் கொதிநிலை 350K ஆகும்.

***வேதிப்பண்பகள் :-***




* பாலிகுளோரோ ப்ளூரோஆல்கேன்கள் பிரியான் என அழைக்கப்படுகிறது.
* இவை நச்சுத் தன்மையற்ற, எரியும் தன்மையில்லா, ஆவியாகக் கூடிய நீர்மங்கள்.
* மிக குறைந்த வினைபுரியும் திறன் உடையது. மேலும் அதிக நிலைப்புத் தன்மை வாய்ந்தது.
* இவை ஆழ்ந்த குளிரூட்டியிலும், குளிர் சாதனங்களிலும் பயன்படுகிறது.
* ராக்கெட் மற்றும் ஜெட் விமானங்களில் எரிப்பொருட்களாகப் பயன்படுகிறது.

எ.கா. $\underset{\substack{(or) \\ CF_2Cl_2}}{Cl_2F_2C}$, $Cl_3F_3C_2$ (or) $CF_3CCl_3$

**<u>DDT உருவாதல் :-</u>**



P, P[1] - டை குளோரோ டை பினைல் டை குளோரோ ஈத்தேன்.

GOVERNMENT OF TAMILNADU TRUTH ALONE TRIUMPHS